
கிட்ட வந்து, அவனைப் பராமரித்தான். (லூக்.10:34)

# பராமரிப்பு

(Paraamarippu)

மாத இதழ்

ஆசிரியர் : Pr. P. ரூபன் தனசிங்



## கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்.

Website :
www.goodsamaritanfellowshipofindia.com
www.houseofpraise.in

Vol. 10

ஆண்டு சந்தா ரூ 100/-

Issue 2

## ஆசிரியரிடமிருந்து......

எனக்கு அன்பான தேவப்பிள்ளையே!



உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!

இந்த ஆண்டின் இரண்டாவது மாதத்தைக் காண கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். முதலாவது மாதம் இதோ, ஓடி மறைந்து விட்டது. காலம் எவ்வளவு வேகமாய்க் கடந்து போகிறது பார்த்தீர்களா? எனவேதான் நாட்கள் பொல்லாதவை களானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் (எபே.5:16) என்று வேதம் சொல்கிறது. நாம் நம்முடைய ஆத்துமாவையும், அதோடு கூட நமது வீட்டில் உள்ளவர்களின் ஆத்துமாக்களையும் இரட்சிக்கப்பட்டவர்களாய், கர்த்தரின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமானவர்களாய் காணப்பட கவனமுள்ளவர்களாய் இருப்போமாக. கர்த்தரின் வருகை சமீபமாயிற்றே!

சென்ற மாதம் நடைபெற்ற அனைத்து ஊழியங்களிலும் தேவ ஆவியானவர் அசைவாடி ஆசீர்வதித்தார். அவருக்கே மகிமையுண்டாகட்டும். இந்த மாதத்தில் நடைபெற இருக்கின்ற சகல ஊழியங்களிலும் தேவ ஆவியானவர் அசைவாட ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்கள் காணிக்கைகளினால் தாங்குங்கள்.

தேவனுடைய கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்!

தேவப்பணியில்

உங்கள் போதகர்.



சிறப்பு செய்தி

# எது ஜீவன்?

போதகர். பா. ரூபன் தனசிங்

மாறிக் கொண்டு வரும் உலகத்தில் விருப்பங்களும், ஆசைகளும், எண்ணங்களும், செயல்களும், தேடல்களும், முயற்சிகளும், ஓட்டங்களும் ஏதோ ஒரு புதியதை நோக்கியே இருக்கிறது. பழைமைவாதிகள், எப்போதும் "பாரம்பரியம்", "சாஸ்திரம்", "கலாச்சாரம்" என்பன போன்றவைகளுக்கு நேராக தங்கள் பார்வையைப் பதித்து இன்னும் அதை பேசிக் கொண்டே தங்களை வளர்த்துக் கொள் கிறார்கள். மிகச் சிறந்த உதாரணம் அரசியல்வாதிகள். "புதுமை வாதிகள்" புதிய புதிய கண்டுபிடிப்புகளுக்கு நேராக ஓடி தங்களை வளர்த்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். மிகச் சிறந்த உதாரணம் "இளைய தலை முறையினர்". பணம், பேர், புகழ் இவைகளை அடைந்து, அதைப் பெருக்கி, அதிலே இன்பம் காண்பவர்கள் அநேகர். உலகப் பணக்காரர்களின் அட்டவணையில் உச்சியில் இருப்பவரும் சரி இன்னும் ஏதோ ஒன்றைத் தேடியே ஓடிக் கொண்டிருக்கின்றனர். பணம் இல்லாதவன் பணத்தைத் தேடுகிறான். பணம் உடையவன் மேலும் பணத்தைத் தேடுகிறான். இயேசு கிறிஸ்து பணம், ஐசுவரியம் இவைகளைக் குறித்து என்ன சொன்னார் தெரியுமா? இதோ! "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" என்றார். (லூக்.12:15) ஏனென்றால் "பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை. செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை. இதுவும் மாயையே" (பிர.5:10)

## எது ஜீவன்?

உலகில் வாழும் பணக்காரர் களும் நோயினால் மரிக்கிறார் களே! அவர்களது செல்வம் அவர்களைக் காப்பாற்ற முடிய வில்லையே! அப்படியானால் இயேசு கிறிஸ்து சொன்னது நூற்றுக்கு நூறு உண்மைதானே! பணம் ஜீவனல்ல வென்றால், பின் எது ஜீவன்? வேதம் என்ன சொல்கிறது பார்ப்போமா?

**புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக் கொள். அதை விட்டு விடாதே; அதைக் காத்துக் கொள். அதுவே உனக்கு ஜீவன்! (நீதி.4:13)**

ஆம்! அப்படியானால் நமக்கு ஒரு நல்ல வாழ்வு வேண்டும் என நாம் விரும்பினால் செல்வத்தைக் குவிப்பதைத் தவிர்த்து, வேதம் கூறுகிற புத்திமதிகளைக் கைக் கொள்வதே தேவையான, சிறந்த, மேலான வழியாகும்.

## யோசுவாவிற்கு தேவன் கொடுத்த புத்திமதி!

"என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப் பிரமாணத்தின் படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலங் கொண்டு திடமன தாயிரு. நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும் படிக்கு அதை விட்டு வலது இடது புறம் விலகாதிருப்பா யாக. இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின் படி யெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளு வாய்" (யோசு.1:7,8)

யோசுவா தன்னுடைய வாழ் நாளில், தான் அதிகாரத்தில் இருந்து ஜனங்களை நடத்தின போது அவன் செய்த யுத்தங்கள்

பல. அப்படி எதிரிகளை சந்திக்கப் புறப்பட்டுப் போன ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், தேவனுடைய ஆலோசனை தேவனால் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த ஆலோசனையை, புத்திமதியை அவன் கைக்கொள்ளத் தவறியதே இல்லை!! அவைகளை அவன் கைக் கொண்டபடியினால் அவன் தன் வாழ்க்கையில் தோல்வியை சந்தித்ததே இல்லை!!

இந்த ஆண்டின் இரண்டாவது மாதத்தில் அடியெடுத்து வைக்கும் நாம், வாழ்க்கையில் வெற்றியும் நன்மைகளும் பெற என்ன செய்ய வேண்டும்? ஆண்டவராகிய இயேசு சொன்ன புத்திமதியைப் பாருங்கள்.

“முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப் பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப் படும். (மத்.6:33)”

“சிங்கக்குட்டிகள் தாழ்ச்சி யடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர் களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.” (சங்.34:10)

தாவீதின் வாழ்க்கையில் தனக்கு பிரச்சனை வந்த சமயங் களிலெல்லாம், தேவனிடத்தில் ஜெபம் பண்ணி, தேவ ஆலோசனை யைக் கேட்கிறவனாய் இருந்தான். தேவன் அவன் கேட்டபோதெல்லாம், இரவு பகல் என்றில்லாமல் அவனுக்கு செவிகொடுத்து ஆலோசனை கொடுத்து வந்தார். அந்த ஆலோசனையின் படி அவன் செய்த போது, எல்லா சமயங்களிலும் வெற்றி பெற்றான்.

அப்படியே நாமும் தேவனுடைய ஆலோசனையைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, காரியங்களைச் செய்தால் வெற்றி வாழ்வு நிச்சயம்.

“புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக் கொள். அதை விட்டு விடாதே; அதைக் காத்துக் கொள். அதுவே உனக்கு ஜீவன். (நீதி.4:13).”



# வேதவினாப்போட்டி



(யோபு)

1. ஒரு நிமிஷம் மாத்திரம் நிற்கும் அது எது?
2. பாவிகளை பட்சிக்கும் அது எது?
3. என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலகேன் என்றது யார்?
4. ஒளியும் இருளாகும் தேசமெது?
5. ஒவ்வொரு ஆடு ரூ.200/– ஒட்டகம் ரூ.1000/– ஏர்மாடு ரூ.1000/– கழுதை ரூ.200/– இந்தக் கணக்கின்படி யோபு பக்தனுக்கிருந்த மிருக ஜீவன்களின் விலைக்கிரயம் என்ன? மிருக ஜீவன்கள் எத்தனை? பின்னலுண்டான ஆசீர்வாதத்தின் கணக்கு என்ன?
6. முதியோர்களிடத்தில் ......................... இருக்கும்?
7. குருடனுக்குக் கண்ணாயிருந்தவர் யார்?
8. லிவியாதான் தும்முகையில் .................... வீசும்
9. பிகெமோத் என்பது என்ன?
10. இதோ, நான் நீசன் யார் யாரிடம் கூறியது?

**20ம் தேதிக்குள் பதில்கள் வந்து சேர வேண்டிய முகவரி**

போதகர். **எபனேசர் சாம் பால்,** (பராமரிப்பு)

41/18, அசம்புரோடு, வடசேரி, நாகர்கோவில் - 1

கைப்பேசி: 7373585803

நீங்கள் உங்கள் full size போட்டோவை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் பிறந்த நாள் தேதியையும் மற்றும் முகவரியையும் அனுப்பி வையுங்கள் உங்கள் பிறந்தநாள் அன்று பரிசை அனுப்புவோம். நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

போதகர். **எபனேசர் சாம் பால்,**

41,18 அசம்பு ரோடு, CBH எதிர்புறம் சக்திகாடன்,

வடசேரி, நாகர்கோவில் - 629 001.

சிறுவர் பகுதி



# ஞானமுள்ள சாலொமோன் ராஜா


சாலொமோன் ராஜா ஆட்சிக்கு வரும்போது அவருக்கு இருபது வயது கூட ஆகவில்லை. அவர் யெகோவாவை நேசிக்கிறார். தன் அப்பா தாவீது கொடுத்த நல்ல அறிவுரைகளைப் பின்பற்றி நடக்கிறார். சாலொமோன் இப்படி நடப்பதைப் பார்த்து யெகோவா சந்தோஷப்படுகிறார். அதனால் ஒரு நாள் ராத்திரி அவருடைய கனவில் சாலொமோன் உனக்கு என்ன வேண்டுமென்று கேள். அதை நான் கொடுக்கிறேன் என்று சொல்கிறார். அதற்கு சாலொமோன் என் தேவனாகிய யெகோவாவே, நான் மிகவும் இளைஞனாக இருக்கிறேன், எப்படி ஆட்சி செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. அதனால் உம்முடைய ஜனத்தைச் சரியான முறையில் ஆட்சி செய்தவற்கு வேண்டிய ஞானத்தை எனக்குத் தாரும் என்று கேட்கிறார். ஞானம் வேண்டுமென்று சாலொமோன் கேட்ட போது யெகோவா சந்தோஷப்படுகிறார். எனவே அவர் நெடுநாள் வாழ வேண்டுமென்றோ செல்வம் வேண்டுமென்றோ நீ கேட்கவில்லை. அதற்கு பதிலாக ஞானம் வேண்டுமென்று கேட்டாய், அதனால் இதுவரை யாருமே பெற்றிராத அதிக ஞானத்தை நான் உனக்குக் கொடுப்பேன். நீ கேட்காததைக் கூட, ஆம், செல்வங்களையும், மகிமையையும் கூட நான் உனக்கும் கொடுப்பேன் என்று சொல்கிறார். கொஞ்ச காலத்திற்குப் பின் இரண்டு பெண்கள் ஒரு பெரிய பிரச்சினையைக் தீர்க்க சாலொமோனிடம் வருகிறார்கள். அவர்களில் ஒருத்தி சொல்கிறார் இவளும் நானும் ஒரே வீட்டில் வசிக்கிறோம். எனக்கு ஒரு மகன் பிறந்தான். இரண்டு நாட்களுக்குப் பிறகு அவளுக்கும் ஒரு மகன் பிறந்தான். ஆனால் ஒரு ராத்திரி அவளுடைய குழந்தை இறந்து விட்டது. அதனால் நான் தூங்கி கொண்டிருக்கும் போது இவள் அவளது மரித்துவிட்ட குழந்தையை என்னிடம் வைத்து விட்டு என்னுடைய குழந்தையை அவள் எடுத்துக் கொண்டு போய்விட்டாள். நான் தூங்கியெழுந்தபோது என் பக்கத்தில் செத்த குழந்தையைப்

பார்த்தேன். பார்த்ததுமே அது என் குழந்தை அல்ல என்பது எனக்குத் தெரிந்தது என்கிறான். உடனே இன்னொருத்தி; இல்லை! இல்லை! உயிரோடுள்ள குழந்தை என்னுடைது. செத்த குழந்தை தான் அவளுடையது! என்று சொல்கிறாள். ஆனால் அந்த முதல் பெண் இல்லவே இல்லை! செத்த குழந்தை உன்னுடையது, உயிரோடுள்ள குழந்தை என்னுடையது! என்று சொல்கிறாள். இப்படியே அந்த இரு பெண்களும் சண்டைப் போட்டுக் கொள்கிறார்கள். சாலொமோன் என்ன செய்யப் போகிறார்? ஒரு வாளை எடுத்து வரச் சொல்கிறார். அதைக் கொண்டு வந்ததும் உயிரோடுள்ள குழந்தையை இரண்டாக வெட்டி ஆளுக்குப் பாதியாக இந்தப் பெண்களிடம் கொடுத்து விடு என்று சொல்கிறார். உடனடியாக அந்த உண்மையான தாய் ஐயோ வேண்டாம்! தயவு செய்து குழந்தையைக் கொல்ல வேண்டாம். அவளுக்கே கொடுத்து விடுங்கள் என்று சொல்லி அழுகிறாள். ஆனால் இன்னொருத்தி எங்கள் இரண்டு பேருக்குமே அந்தக் குழந்தையைக் கொடுக்க வேண்டாம்; அதை இரண்டு துண்டாக வெட்டிப் போடுங்கள் என்று சொல்கிறாள். அவர்கள் பேசி முடித்ததும் சாலொமோன் பேசுகிறார்; குழந்தையைக் கொல்லாதே. அந்த முதல் பெண்ணிடம் கொடுத்து விடு. அவள் தான் அந்தக் குழந்தையின் உண்மையானதாய் என்று சொல்கிறார். உண்மையான தாய் குழந்தையின் மீது உயிரையே வவைத்திருக்கிறாள். அதனால் குழந்தையைக் கொன்று விடக் கூடாது என்பதற்காக மற்றவளிடமே கொடுத்து விடும் படி சொல்கிறாள். இதை வைத்து தான் சாலொமோன் உண்மையான தாய் யார் என்பதை தெரிந்து கொள்கிறார். சாலொமோன் இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைத்த விதத்தைப் பற்றி ஜனங்கள் கேள்விப்படுகிறபோது தங்களுக்கு இப்படிப்பட்ட ஒரு ஞானமுள்ள ராஜா இருப்பதை எண்ணி சந்தோஷப்படுகிறார்கள்.


**உங்கள் கவனத்திற்கு :**

**இதுவரை "பராமரிப்பு" சந்தா கொடுக்காதவர்கள் வருடத்திற்கு ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) கொடுத்து இந்த பத்திரிக்கை வெளிவருவதை தாங்குங்கள்.**

**Google Pay: 9443451115**



# மனம் திரும்புதல்

போதகர்: R. E. **சாம்பால்**

மனதின் தவறான பயணத்தில் இருந்து சரியான பாதைக்கு திரும்புதல். மனதின் குழப்பமான வழியில் இருந்து. தெளிவான பாதைக்கு திரும்புதல். கேடான மற்றும் வீணான சிந்தையில் இருந்து செய்வையான சிந்தைக்கு திரும்புதல். அர்த்தமற்ற காரியங்களில் இருந்து நோக்கமுள்ள வாழ்விற்கு திரும்புதல். நிரந்தரமற்ற வாழ்வில் இருந்து நிரந்தரம் நோக்கி திரும்புதல் என்று அர்த்தம் கொள்ளலாம். இந்த மனம் திரும்புதல் தான் வேதத்தின் பிரதானம். தனது ஜனம் தவறான பாதையில் செல்லும் போதெல்லாம் தமது தீர்க்கதரிசிகளை அனுப்பி மனம் திரும்ப அறைகூவல் விடுத்தார். தமது சொந்த குமாரனை அனுப்பி முதல் பிரசங்கமாக "மனம் திரும்புங்கள்" என்ற தமது ஜனங்களிடம் கோரிக்கை வைத்தார்.

எது மனம் திரும்புதல் அல்ல?

1. சிலாக்கியங்களுக்காக மதம் மாறுவது மனம் திரும்புவது அல்ல.

2. நன்மை பெற சபையில் உறுப்பினர் ஆவது மனம் திரும்புதல் அல்ல.

3. என் வீட்டில் எல்லாரும் கிறிஸ்தவர்கள் நானும் அதே பாதை என்று சபை ஆச்சாரங்களை ஆசாரிப்பது மனம் திரும்புதல் அல்ல.

4. குழந்தை முதல் சடங்குகளுக்கு ஒப்புக் கொடுப்பதும் மனம் திரும்புதல் அல்ல. அப்படியென்றால் இந்த மனம் திரும்புதலில் நான்கு காரியங்கள் உள்ளடக்கி இருக்க வேண்டும்.

**A.** பாவ உணர்வு **(Conviction)**

எனக்குள் தவறு இருக்கின்றது குழப்பம் இருக்கின்றது. கேடு இருக்கின்றது. தவறான வழி இருக்கின்றது என்கின்ற உணர்வு தான் மனம் திரும்புதலின் ஆரம்ப நிலை.

**B.** பாவி என்று ஒத்துகொள்ளுதல் **(Consenting / accepting sinfulness)**

பாவ உணர்வு மட்டும் போதாது. எல்லாரிடமும் தவறு இருக்கின்றது. இந்த தவறுக்கு அவர் தான் காரணம் என்று பழி போடாமல், பிறரை குற்றம் சாட்டி சாக்குப் போக்கு சொல்லாமல் நானே பாவம் செய்தேன் என்று சம்மதிக்க வேண்டும். ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**C.** பாவ அறிக்கை **(Confession of Sins)** மனதில் ஏற்றுக் கொண்டால் மட்டும் போதாது தேவ சமூகத்தில் பிறர் உதவி இன்றி பாவங்களை அறிக்கை செய்ய வேண்டும். உணர்த்தப்பட்ட வேண்டும். பாவங்களை அறிக்கை செய்ய வேண்டும்.

**D.** பாவ விடுப்பு அர்ப்பணிப்பு **(Comittment to relive from sins)**

குறைவில் இருந்து விடுபட அர்ப்பணிக்க வேண்டும். பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற வேண்டும். அதற்கு என்று அர்ப்பணிக்க வேண்டும் எப்படி? 1. இயேசுவும் இரட்சகர் என்னும் சிலுவையில் என் பாவ பரிகாரத்திற்காக பாடுபட்டு இரத்தம் சிந்தி மரித்தார் என்று 2. இருதயத்தில் விசுவாசித்து இயேசுவே ஆண்டவர் என்று நாவினால் அறிக்கை செய்ய வேண்டும். இயேசுவே பரிசுத்தர் என்று அவரே பரிகாரி என்று நாவினால் அறிக்கை செய்ய வேண்டும். 3. இயேசு என் பாவத்தை மன்னித்து உம் இரத்தத்தால் கழுவும் என் மனதை சுத்தமாக்கும் என்று பாவ மன்னிப்பு விண்ணப்பம் செய்து பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற வேண்டும். 4. பாவ மன்னிப்பின் நிச்சயத்தின் சந்தோசம் மற்றும் அன்பு இருதயத்தை உடனே ஆளுகை செய்யும். அப்படியே விட்டு விடக் கூடாது. இயேசு கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்படிய வேண்டும். ஆவது சபை மக்கள் முன்னிலையில் நம்மை கிறிஸ்துவின் மரணத்திற்கு ஒப்பனையாக சிலுவையில் அவரோடு அறையப்படுகிறேன் என்று அவரோடு அடையாளப்படுத்த தண்ணீரில் மூழ்கி பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டும். மனம் திரும்புதலின் ஆசீர்வாதங்கள்!

- மனமாற்றம் அதாவது புதிய சிருஷ்டி மனம் புதிதாக மாறும்.
- தேவனோடு ஒப்புரவாக மாறுதலின் மூலம் அவரின் பிள்ளைகள் என்கின்ற அந்தஸ்து.
- தொடர்ந்து மனம் மறுரூபமாக ஆவிக்குரிய சபை ஐக்கியம்.
- வாக்குத்தத்தங்களாகிய இரட்சிப்பு பரிசுத்த ஆவி, வரங்கள், அழைப்பு, நித்திய ஜீவன் மற்றும் அவரோடு நித்திய காலம் வாழும் சிலாக்கியம் போன்ற ஆசீர்வாதங்களுக்கு பங்காளிகளாக மாறுதல்.

கர்த்தர் தாமே இவ்விதமாக மனம் திரும்புதலின் அனுபவத்தை தந்து சிறுபிள்ளைகளை போல மாற்றி மனதை இந்த உலகில் இருந்து பிரித்தெடுதல் அவரோடு ஐக்கியமாகி வாழும் வாழ்வின் கிருபையை தருவாராக. ஆமென்.



பெண்கள் பகுதி

# இயேசுவின் பார்வையில் பெண்கள்

ஒரு சில சமயங்களைத் தவிர, உலகிலுள்ள பெரும்பான்மை சமயங்கள் பிரபஞ்ச நாயகன் என்ற ஏக இறைவனையே சென்று அடைகின்றன. கிறிஸ்தவம் அந்த ஏக இறைவனை யெகோவா என்ற பெயரால் அழைக்கிறது. யெகோவா தேவன் தன்னையே மனித குலத்தின் மீட்புக்காக மேற்கொண்ட இறைமகன் அவதாரமே இயேசு கிறிஸ்து என்கிறது. கிறிஸ்தவத்தின் தாய் மதமான கத்தோலிக்கம் ஏகஇறைவனாகிய தந்தை யெகோவா என்றாலும் அவரது அவதாரமாகிய இயேசு கிறிஸ்து என்றாலும் தந்தை மகன் ஆகிய இவர்களது பார்வையில் பெண்களை எப்படிக் கருதினார்கள் என்பதற்கு இயேசுவின் வாழ்விலிருந்து நாம் பல உதாரணங்களைக் காணலாம். அவர் பெண்களிடம் பழகிய விதமும், பெண்கள் மீதான அவரது கனிவும், மதிப்பும் கருணையும் சமத்துவமும் நிறைந்த அணுகுமுறையும் இதை எடுத்துக்காட்டும். ஏனெனில் இயேசு என்பவர் தேவனுடைய தற்சொரூபமாகவும் ஒவ்வொரு விஷயத்திலும், கடவுள் எப்படி நடந்திருப்பாரோ, அப்படியே நடந்து கொள்பவராவும் இருக்கிறார் (கொலோசெயர்.1:15) என்ற வசனங்களை நாம் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த வசனங்களின்படியே இயேசு நடந்து கொண்டதையும் அவரது வாழ்வு நமக்குக் காட்டுகிறது. மனுமகன் இயேசு ஊரின் பொதுக் கிணற்றின் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணிடம் பேசிய சம்பவத்தைப் பாருங்கள். சமாரியா நாட்டாளாகிய ஒரு பெண் தண்ணீர் எடுக்க வந்தாள், இயேசு அவளை நோக்கி தாகத்துக்குத் தண்ணீர் கொடு என்றார் என்பதாக யோவான் நற்செய்தி கூறுகிறது. யூதர்களில்

பெரும்பாலும் சமாரியர்களுடன் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ள மாட்டார்கள். அது அன்றைய யூதேயாவில் நிகழ்ந்த சாதிய ஏற்றத்தாழ்வு அடுக்குமுறையின் தாக்கமாக இருக்கலாம். ஒரு சமாரியப் பெண்மணியிடம் பொது இடத்தில் பேச இயேசு தயங்கவில்லை. ஆனால் பொது இடத்தில் ஒரு பெண்ணுடன் பேசுவதை வெட்கங்கொட்ட செயலாக பழமைவாத யூதர்கள் கருதினார்கள். ஆனால் துருப்பிடித்த பழமையைக் காலில் போட்டு மிதிக்க வந்த இயேசு. பெண்களை மரியாதையுடன் நடத்தினார். மேலும் சாதி மற்றும் இன வேறுபாடு காட்டவில்லை. மிக முக்கியமாக அவர் ஆண், பெண் பாகுபாடே பார்க்கவில்லை. மற்றொரு சம்பவத்தில் பன்னிரெண்டு ஆண்டுகளாகக் கடும் இரத்தப்போக்கால் துயர வாழ்வு வாழ்ந்து வந்த ஒரு பெண், இயேசு வீதியில் வருவதைப் பார்த்து, ஓடிச் சென்று அவரைத் தொடுகிறாள். அந்த வினாடியே அவள் குணமடைந்தாள். இயேசு திரும்பி, அவளைப் பார்த்து, மகளே, திடன்கொள், உன் உன்னை இரட்சித்தது என்றார். (மத்தேயு.9:22) யூத மண்ணில் அன்று நிலவிய பொதுச்சட்டத்தின் படி, மாதவிலக்கு ஒரு நோய்க்குள்ளாகி அவதிப்படும் பெண்கள், மக்கள் நடமாடும் பொது இடங்களுக்கு வரக் கூடாது, தவறி வர நேர்ந்தால் யாரையும் தொடக் கூடாது. ஆனால், பொது இடத்தில் தன்னைத் தொட்டு குணம் பெற்ற பெண்ணிடம் இயேசு கோபப்படவில்லை. மாறாக, ஆறுதலாய்ப் பேசி, அவளைக் கனிவுடன் மகளே என்று அழைத்தார். அந்த வார்த்தை ஒடுக்கப்பட்ட பெண்ணினத்தில் ஒருத்தியாய் இருந்த அந்தப் பெண்மணிக்கு எத்தனை ஆறுதலைத் தந்திருக்கும்! இயேசுவின் வாழ்வில் மிக முக்கிய நிகழ்வு மரணத்தை அவர் வெற்றி கொண்டது. தாம் சொன்னபடியே சிலுவையில் மரித்து அடக்கம் செய்யப்பட்ட மூன்றாம் நாள் இயேசு உயிர்த்தெழுந்தார். அவ்வாறு உயிர்த்தெழுந்த பின் மகதலேனா மரியாள் என்ற பெண்ணுக்கும்

மற்ற மரியாள் என வேதம் குறிப்பிடும் ஒரு பெண்ணுக்கும் முதல் காட்சியைத் தருகிறார். அவரது முதன்மைச் சீடர்கள் என்று கருதப்படும். பேதுருவுக்கோ யோவானுக்கோ கூட அவர் தனது முதல் தரிசனத்தைத் தந்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. தனது உயிர்த்தெழுதலை முதலில் காணும் வாய்ப்பைப் பெண்களுக்குத் தருவதன் மூலம் இயேசு அவர்களைக் கௌரவப் படுத்தினார். காட்சி தந்த இயேசு அந்தப் பெண்கள் இருவரையும் நோக்கி, நீங்கள் போய், என் சகோதரருக்குச் சொல்லுங்கள் என்று அந்தப் பெண்களிடம் சொன்னார். (மத்தேயு.28:1,5-10) நீதிமன்றத்தில் பெண்கள் சாட்சி சொன்னால் அதை யூதச் சட்டம் ஏற்றுக்கொள்ளாது. பெண்களை இத்தனை பாகுபாட்டுடன் நடத்திய அதே யூத இனத்தில் தோன்றிய இயேசுவே பெண்களை தேவசாட்சிகளாய் மாற்றி ஆணுக்கு இணையானவள் பெண் என்று காட்டுகிறார். நாம் நமது தாயை, சகோதரியை, மனைவியை, மகளை, தோழியை, சக பெண்களை எப்படிப் பார்க்கிறோம்? இதுவரை இது குறித்து சிந்திக்காவிட்டால், இனி சிந்திக்கவும் செயல்படவும் இதை ஒரு வாய்ப்பாக் கருதுங்கள். இயல்பாகவே நீங்கள் பெண்களை மதிப்பவர் எனில் நீங்கள் இறைவனின் கரங்களில பத்திரமாய் இருப்பவர்.

## ஜனவரி மாதம் சரியான விடைகள் எழுதியவர்கள்

1. சகோ. ராஜா
2. சகோ. கிறிஸ்டோபர்
3. சகோதரி. ஜெபமாலை
4. சகோதரி. மேரி
5. சகோதரி. ரூத்
6. சகோதரி. எஸ்தர்

## ஜனவரி மாதம் சரியான விடைகள்

1. மோசேயின் ஆகமங்கள் – அப்போஸ்தலர்.15:21
2. சாட்சிகளாயிருக்கிறோம் – அப்போஸ்தலர்.2:32
3. பன்னிரண்டு கோத்திரப்பிதாக்களையும் – அப்போஸ்தலர் 7:8
4. பேலிக்ஸ் – அப்போஸ்தலர்.24:24
5. பவுலின் – அப்போஸ்தலர்.19:11
6. இரட்சிப்பு – அப்போஸ்தலர்.4:12
7. யோவான் – அப்போஸ்தலர்.15:37
8. கூடாரம் பண்ணுகிற – அப்போஸ்தலர்.18:3
9. பவுல் – அப்போஸ்தலர்.22:3
10. மூன்று நாள் – அப்போஸ்தலர்.28:12

---



## வாழ்த்துக்கள்!



**இம்மாதம் பிறந்தநாள் மற்றும் திருமணநாள் காணும் அன்பர்களுக்கு பராமரிப்பு குழுவின் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.**

“தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின் மேல் இருப்பதாக” (சங்.3:8)

### காணிக்கை அனுப்ப விரும்பினால் :



**G-Pay : 94434 51115**

(or)

P. Ruban Thanasingh
A/C : 1112101023345
Canara Bank, Meenakshipuram.
IFSC : CNRB0001112




தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**மாவட்டச் செய்திகள்:**

- நாகர்கோவிலில் மாணவியை பலாத்காரம் செய்து வீடியோ எடுத்து மிரட்டியவரை போலீசார் கைது செய்தனர். இவர் 2½ ஆண்டுகளாக வெளிநாட்டில் தலைமறைவாக இருந்தார்.
- திற்பரப்பு அருவியில் தண்ணீர் மிதமாக கொட்டி வருவதால் விடுமுறை நாளில் அலைமோதிய சுற்றுலா பயணிகள் உற்சாகமாக குளித்து மகிழ்ந்தனர்.

**தமிழகம்**

- ஈரோடு கிழக்கு தொகுதியில் காங்கிரஸ் சார்பில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் போட்டி. கட்சி மேலிடம் அதிகாரபூர்வ அறிவிப்பு.
- ஓ. பன்னீர்செல்வம் அ.தி.மு.கவில் இல்லை. இரட்டை இலை சின்னம் பெற எடப்பாடி பழனிச்சாமிக்கே அதிகாரம். ஜெயக்குமார் பேட்டி.

**இந்தியா**

- நீதிபதிகளை நியமிக்கும் விவகாரம். சட்டம் இயற்ற சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் இல்லை. ஓய்வு பெற்ற நீதிபதி கருத்தை மத்திய சட்ட மந்திரி வெளியிட்டார்.
- பாரம்பரிய காவல் நடைமுறைகளுடன் போலீசாருக்கு நவீன தொழில்நுட்பங்களை பயிற்றுவிக்க வேண்டும். பிரதமர் மோடி அறிவுறுத்தல்.

**உலகம்**

- அமெரிக்காவில் பெரும் பரபரப்பு. ஜனாதிபதி ஜோ பைடன் வீட்டில் எப்.பி.ஐ.அதிகாரிகள் அதிரடி சோதனை.
- பிரான்சில் ஓய்வூதிய திட்டத்தில் சீர்திருத்தம் செய்யும் அதிபர் மேக்ரானின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தலைநகர் பாரீசில் நூற்றுக்கணக்கான மக்கள் பேரணி நடத்தினர்.

**உலகம்**

- ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் நம்பர் ஒன் வீராங்கனை ஸ்வியாடெக் அதிர்ச்சி தோல்வி.
- பெண்கள் ஜீனியர் உலகக் கோப்பை கிரிக்கெட் இலங்கையை தோற்கடித்தது இந்தியா.

Registered News Paper
Regd. No.TNTAM/2012/42148
Postal Reg. No. KKI/117/2022-2024
Posted at Nagercoil Head Post Office
Date of Posting 29th & 30th of Every Month Date of Publication : 27st of every month

# உபவாச கூட்டம்

**இடம் : B.S.M. நம்பிக்கை மையம், கோமதிமுத்துபுரம்.**

**நாள் : 2023 பிப்ரவரி 18 (சனிக்கிழமை)**

**நேரம் : காலை 10.00 – 2.00 மணி வரை**

**செய்தி:**

## போதகர் பா. ரூபன் தனசிங்



தொடர்பு:
போதகர் சாம் E. பால்
செல்: 7373585803

*அனுமதி இலவசம்!*

**Owned & Publised by P. Ruban Thanasingh From : 41/18, Asambu Road, Vadasery, Nagercoil-629 001. K.K. Dist., Tamil Nadu, and Printed by S. Jesu Rajan, at Benzen Printers,12, Gnanai Street, W.C.C. Road, Nagercoil-629 001. Editor P. Ruban Thanasingh**

To ..................................................................
..................................................................
..................................................................
..................................................................

If undelivered please return to :
Pr. P. Ruban Thanasingh
**"PARAAMARIPPU"**
41/18, Asambu Road, Vadasery,
Nagercoil, Tamil Nadu,
South India - 629 001.

*Contact :*
***94434 51115***
***73735 85803***



*Benzen Printers, Ngl. Cell : 9442470190*